பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 10 சனிக்கிழமை 22.02.2025 கதிர் 106

## இனி அது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும்தரப்பிடம் தோல்வியைத் தழுவிய தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள், இப்போது அடுத்து

☞2

# மனிதப் புதைகுழியை மறைக்க அதன் மீது தையிட்டி விகாரையா?

மனிதப் புதைகுழியினை மறைக்கும் முகமாக தையிட்டி விகாரை கட்டப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் இருப்பதாக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும்அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரால்நேற்றுவெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

படையினரைப்பொறுத்தவரையில் தமிழர்பிரதேசத்தில்நாட்டின்சட்டங்கள் அவர்களின் இரும்பு சப்பாத்தின் கீழ் என்பதற்கு இன்னொரு அடையாளமே அவர்களால் தையிட்டியில் தனியார் காணியில் கட்டியுள்ள திஸ்ஸ விகாரையாகும்.

இந்த அநீதிக்கு எதிராக ஜனநாயக உரிமையோடு போராடுவோர்க்கு எதிராக பொலிஸாரும் செயற்பட்டு போராட்டம்தொடராதிருக்கஅடையாளம் காணப்பட்டோரை விசாரணைக்கென அழைப்பதையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். அநீதிக்கு எதிரான ஆட்சியாளர்கள் என்று

☞7

## தையிட்டி விகாரை விவகாரம்:
## இரண்டு ஊடகவியலாளர்களும் விசாரணை வளையத்திற்குள்

'தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்' என்று முகநூலில் பகிரப்பட்ட பதிவு தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் பலாலிப் பொலிஸார்

☞8

## 4 வருடங்களில் மட்டும் 2000 யானைகள் சாவு
### 739 மனிதர்களும் உயிரிழப்பு

2021ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான நான்கு வருட காலப்பகுதியில் யானை - மனித மோதல்களினால் 739 மனிதர்களும் 2018 யானைகளும் உயிரிழந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

☞8

## சூட்டுக் காயத்துடன் கடற்கரையில் சடலம்

உஸ்வெட்டகெய்யாவ மோகன்வத்த கடற்கரையில் துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் சடலமொன்று நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டது.

உயிரிழந்தவர் கடவத்தையைச் சேர்ந்த 40 வயதான அயோஷாந்த போப்பே ஆராச்சி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை இரவு அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாமென சந்தேகிப்படுவதுடன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் காணப்பட்ட சி.சி.ரி.வி காணொளியும் தற்போது வெளியாகியுள்ளது.

☞2

# வாக்குறுதிகளை மறந்துவிட்டு ரணிலை பின்பற்றுகிறார் அநுர

## மக்கள் ஆணைக்குத் துரோகம் என எதிர்க் கட்சித் தலைவர் சாடல்

**ஜனாதிபதி தேர்தல் மேடையில் கூறிய அனைத்து விடயங்களையும்மறந்துவிட்டு,ரணில்விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அவ்வாறே பின்பற்றிமக்கள்ஆணைக்குத்துரோகம் இழைத்து,மக்களைஏமாற்றியுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்**



நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற2025ஆம்ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம்

☞2

## கனிமொழி கண்டனம்

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள்மீண்டும்மீண்டும்கைதுசெய்யப்படுவதைஇந்தியநாடாளுமன்றஉறுப்பினர் கனிமொழி கண்டித்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கையின் கடல்சார் இறையாண்மையையும் உள்ளூர் மீனவர்களைப்

☞2

# தலைவர் பிரபாகரன் தொடர்பில் நாடாளுமன்றில் வாக்குவாதம்

விடுதலைப்புலிகளின்தேசியத்தலைவர் பிரபாகரன்குறித்துநாடாளுமன்றஉறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவும் நேற்றுநாடாளுமன்றத்தில்வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவரவுசெலவுத் திட்டம் மீதான நான்காம்நாள் விவாதத்தில் உரையாற்றிய எதிரணியின்நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, 2006இல் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவிலாற்றை மூடி விவசாயிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியதால் 2009 ஆம் ஆண்டு அவர் இறக்க நேரிட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ இரசாயன உரத்தைதடைசெய்து ஒரே இரவில் சேதன உரத்தை பயன்படுத்த அறிவித்தார்.

☞7

## கணேமுல்ல நிசாந்த கொலையாளியை துபாயிலிருந்தே காட்டிக் கொடுத்தனராம்

டுபாயில் இருந்து கிடைக்கப்பெற்ற காட்டிக்கொடுப்பு தகவலுக்கமைவாகவே கொழும்பு நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூடு நடத்திய பிரதான சந்தேகநபர் 8 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டார். கொலைச் சந்தேகநபரின் ஒளிப்படத்தை வெளியிட்டு அவரை ஹீரோவாக்கியுள்ளீர்கள்.இதுமுறையற்றதொருசெயற்பாடு



என்று எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

கொழும்பு நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து நேற்றுநாடாளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சர்வெளியிட்டதகவல்கள் தொடர்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதுக்கடை நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டு பிரதான சந்தேக நபரை 8 மணித்தியாலங்களில் கைது செய்ததாக பொலிஸுக்கு பொறுப்பான

☞7

## கணேமுல்ல சஞ்சீவ கொலை:
## பொலிஸ் கொன்டபிளுக்கு மார்ச் 7 வரையும் மறியல்

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த புதன்கிழமை (19) பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்லசஞ்சீவ'என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிளை எதிர்வரும் மார்ச்7வரைவிளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில்கடமையாற்றும் 26 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் 'கணேமுல்ல சஞ்சீவ' சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபருக்கு உதவி செய்தார் எனக்

☞8

## யாழ். மாவட்ட அரச வைத்தியசாலைகளின்
## வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் நிலவிவரும் வைத்திய சேவைஊழியர்களுக்கானவெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்எனசுகாதாரஅமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்தனதெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள

☞7

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வரும் தேர்தல்களில் எப்படி ஆளும்தரப்பை எதிர்கொள்வதுஎன்றுசிந்திக்கும்இழிநிலைக்கு வந்துள்ளன. துரதிர்ஸ்டம் என்னவென்றால், இந்தநிலையிலிருந்து மீள்வதற்கு மக்களிடம் சென்று அவர்களுடன் கூட்டுச் சேர்வதற்குப் பதிலாகதமக்கிடையில்அரசியல்கூட்டுக்களை ஏற்படுத்துவதில் அவை கவனம் செலுத்தி வருவதுதான்.

தமிழ் தேசியம் பேசிவரும் கட்சிகளின் சுயநல அரசியலால் வெறுப்படைந்த மக்கள் சிங்களத் தேசியக் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த நிலமையில் இப்போது வரையில் பெரும் மாற்றங்கள் எதனையும் தமிழ் அரசியலாளர்களால் ஏற்படுத்த முடியவில்லை. அதற்கான முயற்சிகளைக் கடந்த மூன்று மாதங்களில் அவர்கள் எடுத்தார்கள் என்றும் சொல்லமுடியவில்லை. தோற்ற நாள் முதல் அவர்கள் ஒற்றுமைக் கோசம்ஒன்றையேதமதுஅடுத்தவெற்றிக்கான உத்தியாக்கிக் கொள்ள முயல்கிறார்கள். அதனால் இதுவரையில் துரோகிகளாகக் தூக்கிப் பிடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் இப்போது காணாமல்போய்விட்டார்கள். தம்மைத் தூய்மைவாதிகள் என்று காட்ட மற்றவர்களைத் துரோகிகளாக்கியவர்கள் இப்போது அது குறித்து வாய் திறப்பதில்லை. கடந்த தேர்தல் களத்தில் தாம் கூறியவற்றை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார்கள். இப்படித் தம்மை முட்டாள்களாகக் கருதும் அரசியலாளர்கள் மீதான வெறுப்பில்தான் மக்கள் தொடர்ந்தும் இருக்கிறார்கள்.

இப்போது ஏன் இந்த விளக்கம் எல்லாம் என்றால், வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும்தரப்பிடம் தோற்றுவிடாமல் இருப்பதற்கான குறுக்கு வழி என்ன என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள்ஆராயத்தொடங்கியிருக்கிறார்கள். இதற்கான ஆகப் பிந்திய முயற்சியைத் தொடங்கி இருப்பவர் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம். புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தலைவர் ஜங்கரநேசன் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் தனித்தனியாகச் சந்தித்து இது தொடர்பில் அவர் பேசியிருக்கிறார். ரெலோ தலைவர் செல்வத்துடன் விரைவில் பேச்சு நடத்தவும் திட்டமிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தனித் தனியே போட்டியிட்ட பின்னர், கிடைக்கும் ஆசனங்களின் அடிப்படையில் ஆட்சி அமைப்பதற்காக ஒன்று சேரலாம் என்பது தமிழ் அரசுக் கட்சியின் திட்டம். 60 சதவீதம் நேரடியான தொகுதிவாரித் தெரிவு மூலமும் 40 சதவீதம் பிரதிநிதித்துவம் மூலமும் நடக்கும் இந்தத் தேர்தலில் தொகுதிகளில் தாம் அதிக வெற்றியை ஈட்டுவோம் என்று நம்பும் தமிழ் அரசுக் கட்சி, மற்றைய தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பிரதிநித்துவ முறைக்குள்ளால் தமது உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முயற்சிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. ஏனெனில் தொகுதிவாரியில் வெற்றிபெறுவதனால் மீண்டும் பிரதிநிதித்துவம் ஊடாக உறுப்பினர்களைத் தெரிய தனக்கு வாய்ப்புக் கிடைக்காது என்பதால் இந்தத் திட்டத்தை முன்வைக்கிறது தமிழ் அரசுக் கட்சி.

ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் வாக்குகளில் தொகுதிகளைக் கைப்பற்றுவதன் மூலம் மட்டுமே தமக்கு மக்கள் செல்வாக்கு உள்ளதாகக் காட்டிக்கொள்ள முடியும் என்று கருதும் மற்றைய கட்சிகள், இந்த ஏற்பாட்டுக்கு உடன்படுவது குதிரைக் கொம்புதான். தொகுதிகளை தமிழ் அரசுக் கட்சியிடம் இழந்துவிட்டால் தமது அரசியல் எதிர்காலம் சூனியாமாகிவிடும் என்று கருதும் மற்றைய கட்சிகள் வெல்லக்கூடிய தொகுதிகளையே அதாவது தமிழ் அரசுக் கட்சியின் செல்வாக்கில் உள்ள தொகுதிகளையே இலக்கு வைக்கும் சாத்தியங்களே அதிகமுள்ளன. இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டின் கீழ், இன நலனுக்கான அரசியலை இந்த முறையும் கட்சி மற்றும் அரசியலாளர்கள் சுயநலன்களே வெல்லும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அதை இந்த அரசியலாளர்களால் கடக்க முடிந்தால், மக்களுக்கும் அது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுடன் அவர்கள் இந்தத் தரப்புக்களை ஆதரிக்கவும் வாய்ப்புக்கள் உண்டு.

.......................................................................

தெற்கில் இடம்பெற்ற அடுத்தடுத்த கொலைகள் தொடர்பில் தொடர்ந்தும் தகவல்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

கடைசியாக வந்த தகவலின்படி கணேமல்ல சஞ்சீவ என்கிற பாதாள உலகக் குழுவின் தலைவரைக் கொன்றவர் என்று சந்தேகிக்கப்படும் முன்னாள் கொமாண்டோ படையினரின் காதலி என்று தெரிவிக்கப்படும் பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

சந்தேகநபர் நீதிமன்றத்தி-னுள் வைத்து சுடுவதற்கு வசதியாக, சட்டப் புத்தகத்தினுள் துப்பாக்கியை மறைத்து எடுத்து வந்த கொடுத்தவர் என்று கூறப்படும் பெண் ஒருவரும் தனக்கு மிகவும் நெருக்கமானவர் என்று சந்தேகநபர் வாக்குமூலம் அளித்திருக்கிறார் என தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் இப்போது மற்றொரு காதலியை சந்தேகநபருக்கு அறிமுகம் செயதிருக்கிறார்கள்.

இந்த வழக்கு விசாரணை முடிவதற்குள் சந்தேகநபருக்கு எத்தனை காதலிகளை பொலிஸார் பிடித்துக் கொடுப்பார்களோ தெரியவில்லை.

.......................................................................

அண்மையில் தெற்கிலும் வடக்கிலும் நடந்த துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் அனைத்திலும் தொடர்புபட்டிருப்பவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் இராணுவத்திலிருந்து அல்லது அரசபடைகளில் இருந்து விலகியோர் என்று கூறப்படுகின்றது. சிலர் படைகளைவிட்டுத் தப்பியோடிய பின்னர், பொது மன்னிப்புக் காலத்தில் படைகளில் இருந்து உத்தியோகபூர்வமாக விலகியவர்கள் என்றும் கூறப்படுகின்றது. பாதாள உலகக் கும்பல்களுக்கான கூலிப் படைகளாக பெரும் தொகைப் பணத்திற்கு கூலிப் படையாக இவர்களே என்று கூறப்படுகின்றது.

படைகளில் இருந்து விலகியோரும் தப்பியோடியோரும் உக்ரேன், ரஷ்யா போன்ற நாடுகளுக்குக் கூலிப் படையினராகச் சென்றதுபோக உள்ளூரிலும் கூலிப் படையினராக இயங்கி வந்திருப்பது இதன் மூலம் நன்கு புலனாக்கின்றது. சமூக மயப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிக்ள இயக்க போராளிகளை கண்ணுக்குள் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு கண்காணித்து வந்த அரச படைத்துறைப் புலனாய்வாளர்கள், கொஞ்சம் தமது படையினர் மீதும் கடைக்கண் பார்வையாவது செலுத்தியிருந்தால் இந்த சமூகச் சீரழிவைத் தடுத்திருக்கமுடியும். ஆனால், தமிழர்களையும் முஸ்லிம்களையும் எதிரிகளாகப் பார்த்துப் பழகிவிட்ட அரச படையினருக்கும் அரச இயந்திரத்திற்கும், தமக்குள் உருவாகி வந்த புற்றுநோயை அடையாளம் காணமுடியாமல் போய்விட்டது. அதன் விளைவே நீதிமன்றக் கொலைப் பரபரப்புக்கு மத்தியிலும் மீண்டும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் கப்பம் வாங்குவதற்காகசுட முயற்சித்தசம்பவங்களும் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வாக்குறுதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள் விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ள முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் எந்தளவு விடயங்கள் வரவு செலவு திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். ஆளும்தரப்பு மக்களுக்கு வாக்குறுதி அளித்த பிரகாரம் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பதே எமது நிலைப்பாடு. குறிப்பாக ஆளும்தரப்பின் வளமான நாடு அழகான வாழ்கை என்ற கொள்கை பிரகடனத்தில், மாற்று கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை கொண்டு வருவோம் என்று கூறப்பட்டாலும், அந்த வாக்குறுதியை கைவிட்டு, இன்று மக்கள் மீது பெரும் அசௌகரியத்தையும் அழுத்தத்தையும் சுமத்தியிருக்கிறார்கள்.

மக்களுக்கு நலன்புரி ஒதுக்கீடுகளை வரையறுக்கின்ற 2024 நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம் அடிப்படைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 வீதம், முதன்மை இருப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 வீதம் என்பது ஆளும்தரப்பின் வாக்குறுதி அல்ல. இது அரசாங்கம் பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையைக் காட்டிக்கொடுப்பதாகும்.

சர்வதேசநாணயநிதியத்தின்இணக்கப்பாடு, சர்வதேச பிணைமுறி இணக்கப்பாடுகள் உண்மையாகவேமக்களுக்குபாதிப்பானவை. இதற்காக நாணய நிதியத்தின் வேலைத் திட்டங்களில் இருந்து விலகிக்கொள்ளுமாறு நாங்கள் தெரிவிப்பதில்லை. மாறாக மக்களுக்குப் பொருத்தமான புதிய பயணம் ஒன்றுக்கு ஆளும்தரப்புச் சென்றிருக்கமுடியும். ஆரம்பச் செலவு மற்றும் ஆரம்ப நிலுவையை அவ்வாறு வரையறை செய்யும்போது அது நாட்டின் முன்னேற்றத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவ்வாறு நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பில் ஆளும்தரப்பு அன்று தெரிவித்த அனைத்தையும் மறந்துவிட்டு மக்கள் ஆணையைகாட்டிக்கொடுத்திருக்கிறது.

நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன, அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் அந்தப் பாதிப்புக்களை முடிந்தளவு நாங்கள் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும். மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஓரளவேனும் குறைத்துத்தீர்மானங்களைமேற்கொண்டிருக்க முடியும். நாணய நிதியத்துடன் ரணில் விக்ரமசிங்க இணங்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விலகி மனிதநேய வேலைத்திட்டத்துக்குச் சென்றிருக்கலாம்.

2027இல் கடன் செலுத்த தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். அதனை நாங்கள் வரவேட்கின்றோம். ஆனால் 2028இல் கடன் செலுத்துவதற்கு கட்டயாக பொருளாதார அபிவிருத்தி உயர்ந்த நிலைக்கு செல்ல வேண்டும். அரசவருமானத்தையும் உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்லவேண்டும் அவ்வாறு இல்லாமல் இதனைச் செய்ய முடியாது. 1975ஆம் ஆண்டில் இருந்து இதுவரை சர்வதேச நாணய நிதியத்தில் கைச்சாத்திட்ட 75 நாடுகள் இருக்கின்றன. இவர்கள் பெற்றுக்கொண்ட கடனில் நூற்றுக்கு 59 வீதத்துக்கு நிச்சயமாக 2, 3, 4ஆவது கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டி ஏற்படுகிறது. இந்த விடயத்தை யாரும் மக்களுக்குத் தெரிவிப்பதில்லை. ஒரு கடன் மறுசீரமைப்பின் மூலம் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் நூற்றுக்கு 41 மாத்திரமேயாகும். எமது நாடும் மீண்டும் கடன் மறுசீரமைப்புக்குச் செல்லக்கூடாது என்றே பிராத்திக்கிறேன். அவ்வாறு செய்தால் அது பெரும் நிதி நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

கடன் நிலைபேற்றுத்தன்மை வரிசையில் எமது நாடு இன்னும் வரவில்லை. அப்படியானால் எமது பொருளாதார அபிவிருத்தி அரச வருமானம் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாங்கள் மீண்டும் கடன் மறுசீரமைப்புக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும். அந்த நிலை ஏற்பட்டால் நாங்கள் பெரும் நெருக்கடிக்கு ஆளாகுவோம்.

2025ஆம் ஆண்டில் நூற்றுக்கு 5 சதவீத பொருளாதார அபிவிருத்தி வேகத்தை மேற்கொள்வதாகஜனாதிபதிதெரிவித்திருந்தார். ஆனால் உலக வங்கியின் அறிக்கைக்கு அமைய 2023இல் வறுமை நிலை நூற்றுக்கு 25.9 வீதமாகும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் 2025இல் எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகம் 3,5 என்றே உலக வங்கி தெரிவிக்கிறது. அப்படியானால் எமது பொருளார அபிவிருத்தி வேகத்தில்பெரும்இடைவெளிகாணப்படுகிறது. அதனை நாங்கள் சரிசெய்துகொள்ளாவிட்டால் நாங்கள் கஷ்டத்துக்குள் விழுந்து விடுவோம். அதனால் கட்டயாமாக நாங்கள் விரைவான பொருளாதார அபிவிருத்தி வேகத்துக்குச் செல்லவேண்டும். அந்த பொருளாதார அபிவிருத்திவேகத்துக்குசெல்லும்முறைஇந்த வரவுசெலவுதிட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

வரவு செலவு திட்டத்தில் மக்களுக்கு நன்மை பயக்கும் நல்ல விடயங்களை நடைமுறைப்படுத்த நாங்களும் ஆதரவளிக்க தயாராகவே இருக்கிறோம். அதேநேரம். அதனால் ஆளும்தரப்பு அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் முறையை தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போதைய ஆளும்தரப்பில் முறைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கோட்டாபய மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் முன்னெடுத்த கொள்கையே இங்கும் காணப்படுகிறது. ஆளும்தரப்பின் விருப்பத்திற்கேற்ப திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை கோட்டா, மஹிந்த ஆகியோர் முன்னெடுத்த நடைமுறைகளாகும். மேலும், கடுமையான அரசியல் பழிவாங்கல் இடம்பெற்று வருகின்றன. அரசியல் பழிவாங்களை ஆளும்தரப்பு நிறுத்தவேண்டும் என்றார்.

## சூட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலத்திற்கு அருகில் காணப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியின் 9 வெற்றுத் தோட்டாக்களும் ஒரு ரவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## கனிமொழி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவது குறித்து கவலை தெரிவித்த இந்திய பாராளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்து தெரிவிக்கையில். எத்தனை முறை நம்முடைய மீனவர்கள் சிறைபிடிக்கப்படுகிறார்கள். சிறைபிடிப்பது மட்டுமல்லாமல் இலங்கையிலே அவர்களுடைய படகுகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டு இன்று 200 படகுகளுக்கும் மேல் இலங்கையிலே பறிமுதல் செய்து நமக்கு திருப்பித் தராமல் வைத்திருப்பதுடன் இந்த ஆண்டு இதுவரை கணக்கெடுத்து பார்த்தால் 97 தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கையிலே சிறையிலே அடைக்கப்பட்டு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள என தெரிவித்துள்ளார்.

இதற்கு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் பதிலளிக்கும்போது, கனிமொழி சகோதரி (அமைச்சரிடம்) நாங்கள் மிக வினயமாக கேட்டுக்கொள்வது, உங்கள் மீனவர்களுக்கு எங்கள் எல்லையை மீற வேண்டாம் என்று (மீனவர்களுக்கு) சொல்லுங்கள். நீங்க பக்கத்துல இருக்கும் கேரள கடலுக்கு போவதில்லை பக்கத்தில் இருக்கின்ற ஆந்திர கடலுக்கு போவதில்லை பக்கத்துல இருக்கின்ற பாகிஸ்தான் கடலுக்கும்

தொடர்ச்சி 7ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு - கிழக்கில் விகாரைகள், சிலைகள் அமைக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும்

## முபாறக் மௌலவி வலியுறுத்து

(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்துக்கு அபிவிருத்திக்காக அரசாங்கம் நிதி ஒதுக்கவில்லை என்று ஒரு கோமாளித்தனமாக குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.அமைச்சராக இருந்து ரவூப் ஹக்கீம் என்பவர் பல பில்லியன்களை கல்முனை சம்மாந்துறை போன்றபிரதேசங்களுக்கு ஒதக்கியதாக கூறி சிங்கப்பூர் ஆகவும் ஒரு டுபாய் ஆகவும் அப்பகுதிகளை மாற்ற உள்ளதாகவும் கூறினார். இன்று அவர் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை என உலமா கட்சித் தலைவர் முபாறக் மௌலவி கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் ஏற்பாடு செய்த ஊடக மாநாட்டில் உலமா கட்சித் தலைவர் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது -

தேசியமக்கள்கட்சியால்பாதீடுநாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்துக்கு அபிவிருத்திக்காக அரசாங்கம் நிதி ஒதுக்கவில்லை என்று ஒரு கோமாளித்தனமாக குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. அது மாத்திரமன்றி அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில்



கொதித்துக்கொண்டிருப்பதைநாங்கள்அறிகின்றோம். தற்போதுஅக்கட்சியின்தலைவர்றவூப்ஹக்கீம்உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர் உதுமாலெப்பை போன்றவர்கள் நேற்று தான் அரசியலுக்கு வந்தவர்கள் போன்று நாடாளுமன்றத்தில் செயற்படுகின்றார்கள். முஸ்லிம்காங்கிரஸ் கட்சி இந்த வருடம் தான் ஆரம்பிக்கப்பட்ட கட்சி போன்று நாடாளுமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றது.கிழக்குமாகாணம்அபிவிருத்தி அடையவில்லை கிழக்கு மாகாணத்திற்கு நிதி ஒதுக்கவில்லை என்று கூறுகின்றார்கள் இது உண்மையில் ஒரு வெட்கமான செயற்பாடாகும்.

சுமார்35வருடங்களுக்கு மேலாகஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிழக்கு மாகாணத்தில் அதிகாரத்தில் இருந்திருக்கின்றது.மாகாணசபைகளில் ஆட்சியில் இருந்திருக்கின்றது. எதிர்க்கட்சியாகவும் இருந்திருக்கின்றது.இங்கு தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை என்பவர்மாகாணசபையில்ஓர்அமைச்சராக இருந்திருக்கிறார். அதே போன்று நிஷாம் காரியப்பர் என்பவரும் கல்முனை மாநகர சபையின் ஒரு மேயராக இருந்திருக்கின்றார்.பல்வேறு அமைச்சுக்களுக்கு ஓர் அமைச்சராகறவூப்ஹக்கீம் என்பவர் இருக்கின்றார். கிட்டத்தட்ட 15 வருடங்கள் அமைச்சராக இருந்திருக்கின்றார். இவ்வாறு இருந்து கிழக்கு மாகாணம் அபிவிருத்திஅடையவில்லைஎன்றால் நீங்கள் முன்னர் இருந்த காலத்தில் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள் என்பதை கேட்க விரும்புகின்றேன்.

மக்களைஏமாற்றிஇருக்கின்றீர்கள் மக்களிடம் கொள்ளை அடித்து வாழ்ந்திருக்கின்றீர்கள். அரசாங்கம் தந்த நிதியினை உரிய முறையில் செலவழிக்கவில்லை. அரசாங்கத்தோடு இருந்தும் அதனை சரியான முறையில் செயற்படுத்தவும் இல்லை. 2017 ஆம் ஆண்டு அளவில் அமைச்சராக இருந்து ரவூப் ஹக்கீம் என்பவர் பல பில்லியன்களை கல்முனைக்கு ஒதுக்கி இருப்பதாகவும் கல்முனை சம்மாந்துறை போன்ற பிரதேசங்களை சிங்கப்பூர் ஆகவும் ஒரு டுபாய் ஆகவும் மாற்ற உள்ளதாகவும் கூறினார். இன்று அவர் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை.இங்கு கிழக்கு மாகாணத்திக்கு வந்து மக்களுக்கு ஏதாவது ஒன்றை சொல்லி ஏமாற்றி அதன் பின்னர் அவர்கள் சென்று விடுவார்கள். எங்களைப் பொறுத்தவரை இந்த அரசாங்கத்தில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. தற்போது இந்த அரசாங்கம் வந்து மூன்று மாதங்கள் தான் ஆகின்றன. இந்த நேரம் அரசாங்கத்திற்கு நாங்கள் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும். இவ்வாறு ஆதரிப்பதன் ஊடாக கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு அரசாங்கத்தின் ஊடாக நிதியை நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே நாங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிடம்ஒன்றைகூறவிரும்புகிறோம்எமதுமக்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள்.அது மாத்திரமல்ல அல்ல, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் நடத்துவதற்கு ஓர் எதிரி ஒன்று இன்று தேவையாக உள்ளது. இதனால் தான் கிழக்கு மாகாணத்திற்கு நிதி ஒதுக்கீடு இல்லாமல் சென்றதற்கு தமிழ்த் கூட்டமைப்பு மீது பழி போடப் பார்க்கின்றார்கள். இவ்வாறு பழி கூறுவதற்கு உங்களுக்கு வெட்கம் இல்லையா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு நிதியை தடுத்தால் நீங்கள் எங்கே சென்றீர்கள். இந்தியாவில் இருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகின்றோம். அவ்வாறு தேசிய கூட்டமைப்பால் தடுக்கப்பட்ட நிதியினை உங்களால் போராடி பெற்றுக் கொள்ள முடியாதா என்று நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கில் விகாரைகள் சிலைகள் என்பன அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும் .

ஏனென்றால் பெரும்பாலும் சிலைகள் என்பது வரும் உரிய மதங்களை பொறுத்தவரை புனிதமானவையாக உள்ளதுடன் வணங்கக் கூடியவையாகும். எனவே தமிழர் முஸ்லிம்களின் காணிகளில் விகாரை திறப்பது சிலைகளை அமைப்பது தொடர்பில் நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். அது உண்மையில் தவிர்க்கப்பட வேண்டிய செயல். இந்த நாட்டை இனப் பிரச்சினைக்கு இட்டு சென்று இனங்களுக்கிடையில் மத ரீதியாக குழப்பத்தை உண்டாக்குவதற்கு இவ்வாறு சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். சஜித் பிரேமதாஸ என்பவர் ஒரு காலத்தில் அமைச்சராக இருக்கின்ற பொழுது நாடு முழுவதும் ஆயிரம் விகாரைகளை அமைப்போம் என்று கூறியதற்கு இணங்க இன்று அக்கருத்தை இப்பொழுது சிலர் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் நாங்கள் கவலைப்படுகின்றோம். - எனக் குறிப்பிட்டார்.

# அல் – வாஸித் முன்பள்ளியில் சுகாதார முறைமை விளக்கம்

## சம்மாந்துறையில் நடந்தது

(பாறுக் ஷிஹான்)



முன்பள்ளி சுகாதார மேம்பாட்டுதிட்டத்தின்ஓர் அம்சமாக சம்மாந்துறை அல்-வாஸித் முன் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் பிள்ளைகளின் பற் சுகாதாரம் பரிசோதிக்கப்பட்டதுடன் பல் துலக்கும் பொறிமுறையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் கடந்த வியாழக்கிழமை அன்று தமது சுற்றாடலை அவதானிக்கும் முறை சாப்பாட்டு முறை என்பன குறித்து பிள்ளைகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதுடன் பிள்ளைகளின் உயரம் நிறை என்பன அளவிடப்பட்டு உடற் திணிவுச் சுட்டென் கணிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் பைலான் நளீம் மற்றும் பாடசாலை பற் சிகிச்சையாளர் சஹீர் பேகம் பொதுச்சுகாதார பரிசோதகர் தினேஸ், பிரதேச குடும்ப நல உத்தியோகத்தர் ரிப்னா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ். பல்கலை மாணவர்களுடன் விவசாயிகளுக்கான கலந்தாய்வு



யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின்ஒருமுயற்சியானவிவசாயிகளையும் பல்கலைக்கழக மாணவர்களையும்இணைத்து விவசாயிகளின்பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றிற்கு தீர்வு காணும் முயற்சியாகிய விவசாய மாநாடு நேற்று யாழ் பல்கலைக்கழக விவசாய பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் கே.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்கலைக்கழக விவசாயம் சார்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், வடமாகாண விவசாயப்பணிப்பாளர், விவசாய துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், விவசாய துறைசார்ந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள், என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களின் புத்தாக்க கண்காட்சியும் இடம்பெற்றது. 316

## ‘கிளீன் சிறிலங்கா’ வேலைத்திட்டத்தின் கீழ்

# வவுனியாவில் பாடசாலை உட்கட்டமைபை விருத்தி செய்ய நடவடிக்கை முன்னெடுப்பு

அரசாங்கத்தின் க்ளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியாவிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் படையினரின் பங்கேற்புடன் க்ளீன் சிறிலங்கா வேலைத் திட்டம் பாடசாலையின் அதிபர் எம்.எம்.அன்பஸ் தலைமையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா பம்பைமடு பகுதியில் இருந்து வருகை தந்த இராணுவத்தினர், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் இணைந்து பாடசாலையின் சூழல், குடிநீர் விநியோகம், மலசல கூடம், மைதானம் என்பவற்றை சுத்தம் செய்து திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், பாடசாலையில் அபாயமாக இருந்த மரங்களும் அகற்றப்பட்டன.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் அவர்கள் இந்த மாத ஆரம்பத்தில் பாடசாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்ட பின்னர், அவர் விடுத்த பணிப்புரைக்கு அமைவாகவே க்ளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் இப் பாடசாலையில்முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பித்தக்கது. 100

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டம் ஒழுங்கின் பலவீனம்

செவ்வாய்க்கிழமை இரவு ஒரு தந்தை மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் என்று மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். புதன்கிழமை நீதிமன்றத்திற்குள்ளேயே குற்றவாளிக் கூண்டுக்குள் வைத்து பாதாள உலகக் குழுவின் தலைவர் சுட்டுக்கொலை. வெள்ளிக்கிழமை கொட்டாஞ்சேனையில் வர்த்தகர் சுட்டுக்கொலை என்று அடுத்தடுத்து கொலைச் சம்பவங்கள் அரங்கேறிக்கொண்டே இருக்கின்றன.

பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ள இந்த அடுத்தடுத்த சம்பவங்கள் இலங்கையின் சட்டம் ஒழுங்கின் நிலமை குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு இந்தச் சம்பவங்களால் அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார். ஆனால் அரச சட்டம் ஒழுக்கு அதிகாரிகளுக்குத் தாம் கட்டுப்படவோ, அஞ்சவோ போவதில்லை என்பதைப் போன்று அடுத்தடுத்துப் பழிவாங்கும் படலத்தை அரங்கேற்றுகிறார்கள் பாதாள உலகக் குழுவினர்.

நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன. இருந்தாலும் மாறுவேடத்தில் வந்த கொலையாளியால் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு நீதிமன்றத்தில் இருந்து தப்பிச் செல்ல முடிந்திருக்கின்றது. சட்டம் ஒழுங்குக் காவலர்கள் சந்தேகநபர் தப்பிச் செல்வதைத் தடுக்கத் தவறிவிட்டனர். புத்தளம் பாலவியா பகுதியில் காவல்துறை சிறப்பு அதிரடிப் படையினரால் (றீவீய்) நடத்தப்பட்ட சந்தேகநபர் கைது பின்னர் செய்யப்பட்டார் எனினும் அந்தக் கைதுக்கான தகவல் துபாயிலிருந்து கிடைத்தது அல்லது அது ஒரு காட்டிக்கொடுப்பு என்று சொல்லப்படுகின்றது.

கொலையாளி இந்தியாவிற்குத் தப்பிச் செல்லும் திட்டத்துடன் புத்தளம், கல்பிட்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு முன்பும் இதுபோன்ற குற்றங்களைச் செய் பலர் அண்டை நாடான இந்தியாவுக்கு இந்த வழியாகத் தப்பிச் சென்றது போன்றே அவரும் தப்பி ஒடப்பார்த்திருக்கிறார். அப்படித் தப்பிச் செல்லும் வழி சட்டம் ஒழுங்குக் காவலர்களுக்குத் தெரிந்திருந்தும் அந்த வழி அடைக்கப்படாமல் திறந்தே இருந்திருக்கிறது என்பது பாதுகாப்பு ஓட்டை என்பதைத் தவிர வேறென்ன?

இந்த ஆளும்தரப்பு தேர்தலுக்கான ஏற்பாடுகளின்போது, வாக்காளர்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்தது, அவற்றில் ஒன்று, அவர்கள் ஆட்சிக்கு வந்த ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள், இலங்கையில் சட்டம் ஒழுங்கு நிலைமை பெருமளவில் மாற்றப்படும் என்பதும், பொதுமக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பார்கள் என்பதும் ஆகும். ஆனால் அடுத்தடுத்து நடக்கும் கொலைகள் இவ்வளவு உயர்ந்த வாக்குறுதிகள் பொய்த்துப் போய்விட்டன என்பதையே காட்டுகின்றன. இந்த ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலைக் கொண்டுவருவதாகவும் உறுதியளித்தது. இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதைத் தவிர, இந்தக் குற்றங்களுக்குப் பொது மக்கள் வேறு எந்தப் பொறுப்புணர்வையும் எதிர்காலத்திலாவது காண்பார்களா? பதில் நிச்சயமற்றதே. நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள எவரேனும், அதிக ஆபத்துள்ள/அச்சுறுத்தல் உள்ள சந்தேகநபரை ஏற்றிச் சென்ற சிறைக்காவலர்கள், போதுமான பாதுகாப்பு இல்லாததற்காகவும், தெளிவான பாதுகாப்பு மீறலுக்காகவும் நடவடிக்கை எடுக்கப்படுவார்களா? இதுபோன்ற விஷயங்களுக்குப் பொறுப்பான மூத்த காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்படுவார்களா? அல்லது இந்தக் குறைபாடுகளுக்காக பொதுப் பாதுகாப்பு அமைச்சகத்தில் யாராவது தண்டிக்கப்படுவார்களா? இந்த ஆளும்தரப்பு தங்கள் கண்காணிப்பில் ஒரு பெரிய பாதுகாப்பு தோல்வி ஏற்படும்போது, தங்கள் சொந்த நிறுவனங்களிடமிருந்தும் அரசு எந்திரத்திடமிருந்தும் எவ்வளவு 'பொறுப்புணர்வு' கோரும் என்பதற்குப் காலம்தான் பதில் சொல்லும்.

இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் வன்முறை கலாச்சாரத்தையும், சட்ட அமலாக்கம் மற்றும் நீதித்துறை அமைப்பின் பலவீனங்களையும் இந்தக் கொலைகள் சுட்டிக்காட்டுகின்றன. நீதிமன்றக் கொலைகளுக்கு நேற்று மதியம் போலீசார் நீதிமன்ற வளாகத்திற்குள் நுழையும் வழக்கறிஞர்களை 'சோதனை' செய்யத் தொடங்கியுள்ளனர். இது ஒரு நல்ல மாற்றம்தான். ஆனால், இதுமட்டுமே போதாது.

அண்மையக் கொலைச் சம்பவங்களும், கடந்த மூன்று மாதங்களாகவும், கடந்த இரண்டு வருடங்களாகவும் நடந்த பல துப்பாக்கி வன்முறை சம்பவங்களும், இலங்கை சட்ட அமலாக்க மற்றும் நீதித்துறை எந்திரங்கள் தங்களைத் தாங்களே தீவிரமாகப் மீள்பரிசீலனை செய்து, தங்கள் கலாசாரம் மற்றும் நடைமுறைகளை மறுபரிசீலனை செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. ஆய்வுக் குழுக்களை நியமிப்பது, விசாரணை அறிக்கைகள் கோருவது என்பதற்கு அப்பால் சென்று முறையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். இல்லையேல் 'முறைமை மாற்றம்' முற்றிலும் பொய் என்றாகிவிடும்.

# ரிச்சர்ட் டி சொய்சா மற்றும் விஜய குமாரணதுங்க

**உபுல் யோசப் பெர்னான்டோ**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் கணவரான விஜய குமாரணதுங்கவின் முதல் திரை ஜோடி ஸ்வர்ணா மல்லவராச்சி, 'ஹன்டனே கதவா'வில் அவருடன் நடித்தார். இதன் காரணமாக, அவர் பெரும்பாலும் விஜயாவின் முதல் காதலி என்றும் குறிப்பிடப்பட்டார். குமாரணதுங்க கொல்லப்படுவதற்கு முன்பு, ஸ்வர்ணா அவருடன் 'கெடபட சாயா' உட்படப் பல படங்களில் நடித்தார். இருப்பினும், குமாரணதுங்கவின் கொலையைப் பற்றி ஒரு படம் தயாரிப்பதற்கு அவர் ஒருபோதும் ஆர்வம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




குமாரணதுங்கவின் கதையை திரைக்குக்கொண்டுவருவார் என்று அவரது மனைவி சந்திரிகாவுக்கோ அல்லது அவரது தாயாருக்கோ ஸ்வர்ணா ஒருபோதும் வாக்குறுதி வழங்கியதில்லை. ஒரு சில திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் மட்டுமே தோன்றிய நடிகரான ரிச்சர்ட் டி சொய்சாவின் கொலையைப் பற்றி ஒரு திரைப்படம் எடுக்கவேண்டும் என்ற தனது கனவைப் பற்றி ஸ்வர்ணா பேசியதைப் பார்க்கும்போது இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ரிச்சர்டின் கதையைத் தான் திரைப்படமாகத் தயாரிப்பார் என்று அவரது தாயாரிடம் ஸ்வர்ணா உறுதியளித்திருந்தார். - ஆனால் குமாரணதுங்கவுக்காக அத்தகைய உறுதிமொழி எதையும் அவர் வழங்கவில்லை.

பெயர் வெளியிட விரும்பாத இலங்கையைச் சேர்ந்த ஒரு மூத்த கலைஞர் பகிர்ந்து கொண்ட கதை இது. இந்தக் கதையை அவர் காரணமின்றிப் பகிர்ந்து கொள்ளவில்லை -. ரிச்சர்ட் டி சொய்சா படத்தைச் சுற்றியுள்ள அரசியல் சூழலைப் பற்றிய ஆழமான புரிதல் அவருக்கு இருந்தது. ரிச்சர்ட் டி சொய்சாவின் இறப்பைச் சித்தரிக்கும் ராணி திரைப்படத்தைப் பார்க்க ஜேவிபி தலைவர்கள் ஆவலுடன் வரிசையில் நின்றது தற்செயல் நிகழ்வு அல்ல. அது அவர்களுக்கு அளித்த அரசியல் நன்மையை அவர்கள் அங்கீகரித்தனர்.

ஜே.வி.பிக்குச்சாதகமாகச்சித்தரிக்கப்பட்ட அந்தத்திரைப்பட அலைக்கு முன்பே, சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரணதுங்கவின் ஆட்சியில் இதேபோன்ற நிகழ்ச்சி நிரலைக்கொண்ட தொலைக்காட்சித் தொடர்கள் ஏற்கனவே வெளிவந்திருந்தன. இந்தப் போக்கு மங்கள சமரவீர ஊடக அமைச்சராகப் பணியாற்றியபோது தொடங்கியது. அந்த நேரத்தில், சந்திரிகாவும் மங்களவும் இந்தத் தயாரிப்புகளைப் பயன்படுத்தி ஐ.தே.க.வை விமர்சித்து ஜே.ஆர்-பிரேமதாச நிர்வாகத்தின் வன்முறையை மக்களிடம் முன்னிலைப்படுத்தினர்.

பயங்கரவாதச் செயல்களுக்கு ஜே.வி.பி பொறுப்பல்ல, மாறாக ஐ.தே.கவின் மிருகத்தனத்தினால் அது மாறிவிட்டது என்ற கதையை இந்தத் தொலைக்காட்சி நாடகங்கள் வெளிப்படுத்தின. இந்த நிகழ்ச்சிகளை அரசு நடத்தும் இரண்டு தொலைக்காட்சி வலையமைப்புகளிலும் ஒளிபரப்ப மங்கள வசதி செய்தார், இது ஜேவிபி தனது பிம்பத்தை மறுவடிவமைக்க ஒரு குறிப்பிடத்தக்க தளத்தை வழங்கியது. இந்த வாய்ப்பை கட்சி முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டது.

ஜேவிபி படங்களின் அலை, விஜேவீராவின் கதாபாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கமல் அத ஆராச்சி நடித்த 'கின்னேன் உப்பன் சீதலா' படத்துடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ணா நடித்த 'ரஹஸ் கியானா காது' படம் வெளியானது. ஜேவிபி ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு வெளிவந்த 'ராணி' திரைப்படம் சமீபத்திய படம். தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் மூலம் மக்களின் அனுதாபத்தைப் பெற ஜே.வி.பி. பயன் படுத்திய உத்தி மிகவும் வெற்றிகரமானது.

'தெற்கு & தெற்கு' என்ற முழக்கத்திற்கு பெயர் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றிடம் அத்தகைய உத்திகள் இல்லை. இருந்திருந்தால், ரிச்சர்டின் கொலைக்கு முன்னரான குமாரணதுங்கவின் கொலை, சாகரிகா கோம்ஸின் கொலை மற்றும் டெவிஸ் குருகேவின் கொலை பற்றி திரைப்படங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவேண்டும்.

சாகரிகா கோம்ஸ் ஒரு வளர்ந்துவரும் பாடகி. பிரேமதாச ஆட்சியில் அவரது பாடல்கள் மிகவும்



பிரபலமாக இருந்தன. அவர் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்தார். இந்த நிறுவனங்களின் தொகுப்பாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள் துரோகிகளாகக் கருதப்பட்டு கொல்லப்படுவார்கள் என்று ஜே.வி.பி., ரூபவாஹினி, ஐ.டி.என் தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் வானொலி ஒலிபரப்பு சேவைகளுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருந்த காலமது. இந்த நேரத்தில், ரிச்சர்ட் டி சொய்சா ரூபவாஹினியில் ஒரு ஆங்கில செய்தி தொகுப்பாளராகவும் இருந்தார். ஜேவிபி உத்தரவை மதித்து, ரிச்சர்ட் செய்திகள் வாசிப்பதை நிறுத்தினார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ரிச்சர்ட் டி ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

ரிச்சர்ட் டி சொய்சாவின் நெருங்கிய நண்பரான ராஜீவ வீரசிங்க, மற்ற செய்தி வழங்குநர்களையும் அவ்வாறே செய்யச் சொன்னார் என்று கூறினார். 'ராணி' திரைப்படம் திரையிடப்பட்ட பிறகு அவர் ஊடகங்களுக்குச் சொன்ன கதையின் ஒரு பகுதி இது.

"ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி) செய்திகள் வாசிப்பதை நிறுத்துமாறு அவரிடம் கேட்டபோது, ரிச்சர்ட் செய்திவாசிப்பதைநிறுத்திவிட்டார். அதனால்தான் பலர் அவர் ஒரு ஜேவிபி உறுப்பினர் என்று சொன்னார்கள். ஒருவர் என்னிடம் வந்து, தனது நெருங்கிய சகாக்களும் செய்திவாசிக்கக்கூடாது என்று கூறினார் எனத் தெரிவித்தார். நான் அதைப் பற்றி ரிச்சர்டிடம் கேட்டேன். நண்பர்களைக் கொஞ்சம் கவனமாக இருக்கச் சொன்னேன் என்று அவர் கூறினார். ஜே.வி.பி.யின் வேண்டுகோளின் பேரில் அவர் செய்திகளை நிறுத்த முயன்றார் என்று சிலர் கூறினர்." இவ்வாறு 'அருணா' செய்தித்தாள் 2025 பெப்ரவரி 9 அன்று எழுதியிருந்தது.

ரிச்சர்டின் நண்பரின் கூற்றுப்படி, ரிச்சர்ட் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளர்களிடம் ஜேவிபியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியச் சொல்லியிருக்கிறார். எப்படியோ, செய்தி அறிவிப்பாளர்கள் சாவுப் பயம் காரணமாக தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பதை நிறுத்திவிட்டனர். ரூபவாஹினி தலைவரின் செல்வாக்கின் கீழ், அந்த நேரத்தில் ரூபவாஹினியில் பணிபுரிந்த பிரபல பாடகியான சாகரிகா கோம்ஸ், தொலைக்காட்சியில் செய்திகளை வாசிக்க முன்வந்தார். இந்தக் காரணத்திற்காக, ஜே.வி.பி. அவரைக் கொன்றது. ஜே.வி.பியின் அச்சுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாத அவர் மட்டு மல்ல, சுயாதீன தொலைக் காட்சியின் தலைவர் தேவிஸ் குருகே மற்றும் பிரபல பாடலாசிரியர் மற்றும் அறிவிப்பாளர் பிரேமகீர்த்தி டி அல்விஸ் ஆகியோரும் ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டனர்.

ஜே.வி.பி. செய்திவாசிக்கவேண்டாம் என்று பிறப்பித்த உத்தரவையும், மற்ற அறிவிப்பாளர்களை அந்த உத்தரவைக் கடைப்பிடிக்கச் சொன்னதையும் காரணமாக வைத்து, பிரேமதாச ஆட்சிக்காலத்தில் ரிச்சர்ட் கொல்லப்பட்டது ஒரு கொடூரமான செயல் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அதேபோல், ஜே.வி.பியின் கட்டளைகளையோ அல்லது ரிச்சர்ட் டி சொய்சாவின் செல்வாக்கையோ பின்பற்றாமல் செய்தி வாசித்த சாகரிகா கோம்ஸை ஜே.வி.பி. கொன்றதும் ஒரு கொடூரமான செயலாகும்.

இலங்கைக் கலைஞர்களின் பிரச்சினை என்னவென்றால், ரிச்சர்ட் டி சொய்சா ஒரு ஹீரோவாக நடத்தப்படுகிறார், சாகரிகா கோம்ஸ் அப்படி நடத்தப்படுவதில்லை. இதற்குக் காரணம், பெரும்பாலான இலங்கைக் கலைஞர்கள் இடதுசாரி ஜேவிபி சித்தாந்தத்தின் ஆதரவாளர்கள் என்பதுதான். 'ராணி' படத்தை இயக்கிய இயக்குநர், விஜேவீர கொல்லப்பட்டபோது அவர் மயங்கி விழுந்தார் என்று கூறுகிறார்.

அந்த வகையில், 'ராணி' ஒரு அரசியல் படம். 'ராணி' படத்தை லைகா மொபைலின் உரிமையாளர் சுபாஸ்கரன் அலிராஜா தயாரித்துள்ளார். அவர் பணமோசடிக் குற்றச்சாட்டுக்கு ஆளாகிய ஒருவர். ஆளும்தரப்புக்களை நம்பி தனது வணிக வலையமைப்பை வலுப்படுத்த முயற்சிக்கிறார். 'ராணி' படம் அவருக்கு ஜேவிபி ஆளும்தரப்பு மீது சாய்ந்து நிற்க ஒரு படிக்கல்லா என்பது தெரியவில்லை.

இடதுசாரிகளுக்கு எந்த



வேலையையும் பிசாசைப் பயன்படுத்தியாவது செய்து முடிப்பது எப்படி என்று தெரியும். தெற்குக் கரைக்கு இது தெரியாது. தெற்குக் கரையில் அதைச் செய்த ஒரு தலைவர் இருந்தார். அது ரணசிங்க பிரேமதாச. காமினி பொன்சேகா, மாலினி பொன்சேகா, ஜோ அபேவிக்ரம, ரவீந்திர ரந்தேனியா, சனத் குணதிலகா போன்ற சினிமா ஜாம்பவான்கள், சைமன் நவகத்தேகம போன்ற நாவலாசிரியர்கள் மற்றும் நாடக ஆசிரியர்கள் மற்றும் ஜோதிபாலா, லதா போன்ற பாடகர்கள் மூலம் அவர் தென்னகக் கருத்தை நாட்டிற்குள் கொண்டு சென்றார்.

பிரேமதாசா இல்லையென்றால், காமினி பொன்சேகா 'சாகரயம் மேடா' படத்தை ஒருபோதும் எடுத்திருக்கமாட்டார். பிரேமதாச காமினியையும் சனத்தையும் அரசியலுக்குக் கொண்டு வந்தார். டி.எஸ்., டட்லி, சேர் ஜான், மற்றும் ஜே.ஆர். ஆகியோர் கொழும்பின் கறுவாத் தோட்டத்தைச் சேர்ந்த 'டை கோர்ட்' அணிந்த ஆங்கிலம் பேசும் தலைவர்கள், அவர்கள் தெற்கத்தியக் கருத்தை மக்களிடையே கொண்டு செல்வதில் மூலோபாயமாக இருக்கவில்லை. கொழும்பில் ஆங்கிலம் பேசும் கலைஞர்களுடன் அவர்களுக்கு தொடர்புகள் இருந்தன. பிரேமதாச பிரபலமான சிங்களக் கலைஞர்களைத் தெற்குக் கருத்தின் பிரதிநிதிகளாக மாற்றினார். பிரேமதாசவைப் போலவே, காமினி திசாநாயக்கவும் மகாவலி மூலம் இதை மூலோபாய ரீதியாகச் செய்தார்.

அரசியல் கருப்பொருள்களைக் கொண்ட திரைப்படங்கள் வெகு காலத்திற்கு முன்பே தொடங்கின. இந்தப் படங்கள் படிப்படியாக அரசியல் செய்திகளை வழங்குவதில் வளர்ச்சியடைந்தன. டி.பியை அடிப்படையாகக் கொண்ட 'கவ்ட ராஜா', மற்றும் 'திலகா & திலக்கா'. இளங்கரத்னவின் 'புத்தகங்கள்' அத்தகைய திரைப்படங்கள். அரசியல் செய்தியுடன் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்ட முதல் படம் 'சாகரயக் மேதா' ஆகும், இதை ஐ.தே.க ஆட்சி முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டது.

பிரேமதாசா மற்றும் காமினிக்குப் பிறகு, தெற்கின் கருத்துக்களை கலை மூலம் நாட்டிற்குள் கொண்டு வரக்கூடிய தலைவர்கள் யாரும் இல்லை. குமாரணதுங்க இலங்கையில் மிகவும் பிரபலமான நடிகர். அவரது மனைவி சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது அந்தக் கொலையைப் பற்றி ஒரு திரைப்படத்தை எடுக்கக்கூட முயற்சிக்கவில்லை. விஜயா ஐக்கிய தேசியக் கட்சியால் கொல்லப்பட்டிருந்தால், இலங்கையில் உள்ள கலைஞர்கள் குமாரணதுங்கவின் கொலையைப் பற்றி திரைப்படங்களை எடுக்கத் துடித்திருப்பார்கள், துரதிர்ஷ்டவசமாக, குமாரணதுங்கவைக் கொன்றது இடதுசாரி ஜே.வி.பியாகப் போய்விட்டது. அதனால் அவரைப் பற்றிய திரைப்படம் எதுவும் வரமாலேயே போய்விட்டது.



காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியாவின் பிரச்சினைகள் குறித்து மத்திய மாகாண ஆளுநருடன் கலந்தாய்வு

(கேதீஸ்)

நுவரெலியா நகரில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ். பி. எஸ். அபயகோன் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நுவரெலியா மாநகரசபையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர் விநியோக முறையை தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகால் சபைக்கு மாற்றுவது மற்றும் கிரகரி வாவியை சுத்தப்படுத்துவது தொடர்பாகவும் நுவரெலியா மாநகரசபையால் 1925 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா மாநகரசபைக்கு குடிநீர் வழங்கும் நீர் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் இங்கு இந்த நீர் வழங்கும் திட்டத்தை நீர் வழங்கல்சபைக்குமாற்றுவதுதொடர்பானயோசனைகள் மற்றும் ஆலோசனைகள் எடுக்கப்பட்டதுடன், நகருக்கு நீர் வழங்க உத்தேச அம்பேவல புதிய நீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நுவரெலியாவிலுள்ள கிரகரி வாவியில் பாசி மற்றும் வண்டல் மண் அகற்றுதல் மற்றும் அதன் நிர்வாகத்தை முறைப்படுத்துதல், கிரகரி வாவியின் சட்டப்பூர்வ பொறுப்பை நுவரெலியா மாநகர சபைக்கு வழங்குதல், வாவி தொடர்பான கட்டுப்பாட்டுக் குழுவை நடைமுறைப்படுத்துதல், பாசி, மணல் மற்றும் வண்டல் மண் அகற்றுதல் தொடர்பாக தற்போதைய நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பிலான பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை நுவரெலியா மாவட்ட





ஒருங்கிணைப்புக் குழுவிடம் ஒரு மாத காலத்திற்குள் முன்வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுநரின் செயலாளர் மஞ்சுள மதஹபொல, அதிபர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் மதுபானி பியசேன, நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் மற்றும் அரச அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வெளிநாட்டவர்கள் பயணித்த ஓட்டோ விபத்து; ஒருவர் காயம்

(கிஷாந்தன்)

நுவரெலியாவிலிருந்து நானுஓயா ரயில் நிலையத்திற்கு இரண்டு வெளிநாட்டவர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோ, எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது மோதியதில், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயமடைந்து, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதியில் வியாழக்கிழமை நானுஓயா பங்களாஅத்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நானுஓயாவிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று, முன்னால் பயணித்த பஸ்ஸை கவனக்குறைவாக முந்திச் செல்ல முயன்றபோது, எதிர் திசையில் நானுஓயா நோக்கிச் சென்ற ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் மோதிய பின்னர், ஓட்டோ வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப் ரக வாகனம் மீது மோதியது.


விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நானுஓயா பொலிஸார், விபத்தில் இரண்டு வெளிநாட்டினருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், ஆனால் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த வெளிநாட்டவர்கள் நுவரெலியா பகுதியை பார்வையிட்ட பின்னர் நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து எல்ல நோக்கி பயணிப்பதற்காக நானுஓயா ரயில் நிலையம் சென்ற போதே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடதக்கது.

# கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும் நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை

(அபூ ஷைனப்)

ஓய்வுநிலை அதிபர் எம்.எல்.எம். இஸ்மாயில் எழுதிய 'கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சிம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமையில் இடம்பெறவுள்ளது.




இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக அதிபர் இஸ்மாயில் அவர்களின் மாணவர்களான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியர் எம்.டி.எம் மஹீஷ், வடமேல் மாகாண மேலதிக கல்வி பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்றிருக்கும் யூ.எம். பி. ஜெயந்திலா ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

கௌரவ மற்றும் சிறப்பு அதிதிகளாக அதிபர் இஸ்மாயில் அவர்களால் உருவாக்கப்பட்டு கல்விப்புலத்தில் உயர் பதவிகள் வகிக்கின்ற இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்தநூல்பற்றியநயவுரையை ஓய்வு பெற்ற குளியாப்பிட்டிய வலயக்கல்விபணிப்பாளர் எம்.ஏ. ஜி. அஷ்ரப் வழங்க உள்ளார்.

நூலின் முதல் பிரதியை மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் எம்.ஆர்.எம் இம்ரான் பெற்றுக் கொள்வார். ஏற்புரையும் நன்றியுரையும் நூலாசிரியர் ஓய்வு பெற்ற அதிபர் எம்.எல்.எம். இஸ்மாயில் அவர்கள் வழங்குவார்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பும் தொகுப்பும் மதீனா தேசிய பாடசாலையின்பழையமாணவர் கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் மேற்கொள்வார்.

'கல்விப் பணியில் சவால்களும் சாதனைகளும்' என்ற இந்நூலானது கல்விப் புலத்தில் இயங்குகின்றவர்களுக்கு உசாத்துணை நூலாக அமையும். கல்வி முகாமைத்துவம் மற்றும், பாடசாலை முகாமைத்துவம் போன்ற செயற்பாடுகளில் ஓர் அதிபர் எதிர்நோக்குகின்ற சவால்களை அடையாளப்படுத்தி அவற்றை சமயோசிதமாக தீர்த்து வைக்கின்ற வழிவகைகளை சொல்லி நிற்கிறது இந்த நூல்.




# மடிக்கணனிகள் அன்பளிப்பு

(கேதீஸ்)

நலம் அமைப்பினூடாக அக்கரப்பத்தனை லோவர்கிரண்லி பாடசாலைக்கு 14 மடிக் கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நலம் அமைப்பின் இணைப்பாளர் மாஹா மற்றும் அவரது கணவர் ஹேங் ஆகியோர் பாடசாலையின் அதிபர் கே.பாலகிருஸ்ணனிடம் இந்த மடிக் கணனிகளை கையளித்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் கே.பாலகிருஸ்ணன், நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தநலம்அமைப்பின்இணைப்பாளர்மாஹா மற்றும்அவரதுகணவர்ஹேங், கோட்டக்கல்விப் பணிப்பாளர் நிக்கலஸ், தொழிநுட்ப பாடத்திற்கு பொறுப்பான ஆசிரியர் ஆலோசகர் எண்டன் இக்னேஷியஸ் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள்,மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.





## கனிமொழி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை

ஆனால் எங்களுடைய கடல்தான் உங்களுக்கு தேவை. எங்களுடைய மீன்கள் எல்லாத்தையும் பிடித்து எங்களுடைய வள்ளங்களை அறுத்து நொறுக்கி வலைகளை அறுத்து நாசமாக்கிவிடுகிறீர்கள். 20சதவீதமாக இருக்கும் எங்கள் மீனவர்களுடைய வாழ்க்கையையும் நாசமாக்கிவிட்டு செல்கிறீர்கள். 30 வருடங்களாக நாங்கள் யுத்தத்திற்கு முகம்கொடுத்த மக்கள் யுத்தத்தின் காரணமாக பாரிய பின்னடைவுகளை சந்தித்திருக்கின்றோம். இப்ப தான் ஓரளவு தலை தூக்கிக் கொண்டு வருகின்ற போது சீசன் டைம்ல வந்து உங்களுடைய ஆயிரக்கணக்கான படகுகள் எங்களுடைய கடல் வளத்தை மாத்திரமல்லாமல் (மீனவர்களின் வாழ்வாதாரத்தையும்) நாசமாக்கிக் கொண்டு போகின்றார்கள் என்று கடும் கண்டனத்தை வெளிப்படுத்தினார்.

கடல் எல்லைகளைப் பாதுகாத்தல், மீன்வளத்தின் நிலைத்தன்மை மற்றும் இலங்கை மீன்பிடி சமூகங்களின் தேசிய வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைத் தடுக்க இலங்கை அரசாங்கம் இந்திய அதிகாரிகளுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அவரின் ஆட்சியே இல்லாமல் போய் வீட்டுக்கு போக நேரிட்டது. இதனால் விவசாயிகளுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க வேண்டும். விவசாயிகளை பகைத்துக் கொள்ள கூடாது என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அருச்சுனா, நான் வடக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இந்த இடத்தில் சில விடயங்களை தெளிவுப்படுத்த வேண்டும். இவர் (ரோஹித்த அபேகுணவர்னவை நோக்கி) எங்களின் தலைவர் பிரபாகரன் தொடர்பில் கதைத்தார். 2009இல் அவரை இல்லாமல் செய்ததாகவும் கூறினார். அப்படியிருக்கையில் ஏன் இன்று வரையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவில்லை என்பதனைக் கூறுங்கள் என்றார்.

பதிலளித்த அமைச்சர் வசந்த சமரசிங்க, ஒழுங்குப் பிரச்சினை என்றால் என்ன என்று தெரியாமல் தேவையில்லாத விவாதத்தை இவர் உருவாக்குகின்றார். ஆகவே இதற்கு இடமளிக்க வேண்டாம். என்று குறிப்பிட்டார்.

சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி, இது ஒழுங்குப் பிரச்சினை அல்லவென என்று அறிவித்தார். இதனை தொடர்ந்து ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, நான் ஒருபோதும் இவர்களின் தலைவர் என்று பிரபாகரனைக் கூறவில்லை என்றார். ”அவரை தலைவராகக் கூறவேண்டிய அவசியம் எனக்கில்லை. அவர் ஒரு பயங்கரவாதி, அன்றும், இன்றும். என்றும் அவர் பயங்கரவாதி, புலி, புலி” என்று உரத்துக் குறிப்பிட்டார்.

உடனே மீண்டும் ஒழுங்குப்பிரச்சினையை எழுப்ப அர்ச்சுனா முயன்றபோதும், அதற்கு இடமளிக்காத பிரதி சபாநாயகர், மதியபோசனத்திற்காக சபையை 12.30 மணி முதல் ஒரு மணி நேரத்திற்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

1.30 மணிக்கு மீண்டும் சபை கூடியபோது, மீண்டும் தனது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி உரையாற்ற அருச்சுனா முயற்சித்தார். இவ்வேளையில் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி குழுக்களின் தலைவர் ஹேமாலி வீரசேகர, அதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. அது நிலையியல் கட்டளையை மீறுவதாகும் என்றார். எனினும் தொடர்ந்தும் தனக்கு பேச அனுமதி கேட்ட அருச்சுனா நானொரு கட்சித் தலைவர், எனக்கு ஒரு நிமிடத்தை தாருங்கள், மற்றையவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் நீங்கள் தமிழ் சிறுபான்மையினர் கேட்கும்போது நிலையியல் கட்டளையை பார்க்கின்றீர்கள். ஏன் இந்த நாட்டில் இவ்வாறு நடக்கிறது என்றார்.

இருந்தாலும் அருச்சுனாவிற்குத் தொடர்ந்து பேசும் அனுமதியை பிரதி குழுக்களின் தலைவர் மறுத்துவிட்டார்.

## வெற்றிடங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச வைத்தியசாலைகளில் காணப்படும் மனிதவள தேவைகளை இனங்கண்டு, அவற்றிற்கு உரிய தீர்வுகளை பெற்று தரும் நோக்குடன் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன அண்மையில் விசேட களஆய்வுப் பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இந்தப்பயணத்தின்போது ஊர்காவற்றுறை பொது மருத்துவமனை, வேலணை மாவட்ட மருத்துவமனை, வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், யாழ். போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி பொது வைத்தியசாலை மற்றும் மாங்குளம் பொது வைத்தியசாலை ஆகியவற்றில் மனித மற்றும் பௌதீக வளங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் யாழ். மக்களைப் பாதிக்கக்கூடிய தொற்றா நோய்கள், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தல், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் வைத்தியசாலைக்கு அவசியமான மருந்துப் பொருட்கள் தொடர்பிலும் வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது சுகாதாரப் பணிப்பாளர், தீர்வினைப் பெற்றுதரக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்ததுடன், சுகாதார அமைச்சரிடம் தெரிவித்து ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் வழங்கப்படும் என்றார்.

இதேவேளை சுகாதார அமைச்சின் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்துக்குட்பட்ட அரச வைத்தியசாலைகளில் தற்போது நிலவிவரும் வைத்தியர் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும். தற்போது பயிற்சி நெறிகளை முன்னெடுத்துவருபவர்கள் மற்றும் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வைத்திய ஊழியர்களை மேற்படி வைத்தியசாலைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கிறேன்.

புதிய ஆளும்தரப்பால் முன்வைக்கப் பட்டுள்ள இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சின் எதிர்கால அபிவிருத்தி பணிகளுக்காக பெருமளவான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் குறித்த நிதியை உரியமுறையில் பயன்படுத்தி இந்நாட்டு மக்களுக்கு உயர்தரமான சுகாதார சேவையை வழங்குவது சுகாதார அமைச்சின் முதன்மையான நோக்கமாகும் என்றார்.

## கணேமுல்ல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கூறினார். பொலிஸ் திணைக்களம் 8 மணித்தியலங்களில் திறமையாக சந்தேகநபரை கைது செய்தமை தொடர்பில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் மற்றைய சந்தேக நபரான பெண்ணை இதுவரை கைதுசெய்யவில்லை. அந்தப்பெண் நீர்கொழும்புக்கு சென்று துப்பாக்கிதாரியிடம் இருந்து பிரிந்து தனியாகச் சென்றுள்ளார். ஆனால் பிரதான துப்பாக்கிதாரி மாத்திரமே கைது செய்யப்பட்டுள்ளார்.

நீங்கள் (பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரை நோக்கி) இவ்வாறு கூறினாலும் ஊடகசெய்திகளில் டுபாயில் இருந்து துப்பாக்கிதாரி காட்டிக்கொடுக்கப்பட்டமையினாலேயே துப்பாக்கிதாரியை கைது செய்ய முடிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதன்படி இது எமது திறமையால் அன்றி டுபாயில் இருந்து பாதாள கும்பலால் காட்டிக்கொடுத்தமை ஊடாகவே அவர் கைதாகியுள்ளார். இப்படிதான் ஊடகங்கள் கூறுகின்றன.

இதேவேளை சந்தேகநபரின் படங்களை வெளியிட்டு அவரை ஹீரோவாக்கியுள்ளீர்கள். இவ்வாறு ஒளிப்படங்களைப் பகிர்வதற்கு இடமளிக்க வேண்டாம். அந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்ட போது பாதுகாப்பு தரப்பினரை பார்த்து சிரித்து, காதல் கொள்வது போல் காணொளிகள், படங்கள் வெளியாகியுள்ளன. கைது செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் எவ்வாறு சமூக வலைத்தளங்களுக்கும், ஊடகங்களுக்கும் வெளியாகின என்பது தொடர்பில் விசாரணை செய்யுங்கள் என்றார்.

## மனிதப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மைத் தம்பட்டம் அடிக்கும் தேசிய மக்கள் சக்தி தலையிட்டு நீதியை நிலைநாட்டாதவிடத்து அது தமிழர்களுக்கு இழைக்கும் அநீதியாக அமைவதோடு அதுவே இனங்களுக்கிடையில் அமைதியின்மை இன, மத விரிசல் என்பன ஏற்படுவதற்கும் வழிவகுக்கும். அதுமட்டுமல்ல, தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த தமிழ் தேச மக்களை அவமானப்படுத்துவதாக அமையும் எனவும் கூறுகின்றோம்.

வரலாற்றில் மன்னர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் செல்வம் பெருகி அமைதி நிலவியபோது அரசன் தமது கௌரவத்துக்காகவும் புகழுக்காகவும் வானுயரக் கோபுரங்களோடு வழிபாட்டிடங்களை அமைத்ததாகவும் அதன் மூலம் பக்தி வளர்ந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், இலங்கையில் விசேடமாக 1948ஆம் ஆண்டுக்கு பின்னரான காலகட்டத்தில் சிங்கள பௌத்த பேரினவாதத்தை பாதுகாக்கவும் அதன் மூலம் அரசியல் செய்யவும் ஆட்சியை கைப்பற்றவும் மட்டுமல்ல, தமிழர் தேசத்தில் நிலங்களை ஆக்கிரமிக்கவும் ஆட்சியாளர் விகாரைகளை கட்டியதே வரலாறு.

அதேபோன்று தமிழர் தேசத்தில் பல நூறு விகாரைகளை கட்டுவோம் என சூழுரைத்த சிங்கள பௌத்த அரசியல்வாதிகளையும் கொண்டதே நாட்டின் அரசியல். போர்க் காலத்தில் படையினர் பொதுமக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து துரத்திவிட்டு அவர்களுக்குச் சொந்தமான காணிகளை இல்லாமல் ஆக்கிரமித்து பெரும் படைத்தளங்களை அமைத்தனர். புத்தரின் தர்ம போதனைகளை எல்லாம் தூக்கி எறிந்தவர்கள் தனது வழிபாட்டுக்கென படைத்தளங்களில் வழிபாட்டுத்தலங்களையும் அமைத்துக்கொண்டனர்.

அந்த வகையில் தற்போது சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள தையிட்டி விகாரை பல கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்புகிறது. விகாரைக்கென்று காணி இருக்கும்போது தனியார் காணியை தேர்ந்தெடுத்து அதன் உரிமையாளர்களின் அனுமதியின்றி விகாரை கட்டியது ஏன்? தொற்று நோய் காரணமாக முழு நாடும் முடக்கப்பட்டிருந்தபோது அவசர அவசரமாக விகாரை எழுப்பியது ஏன்? நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியை அடைந்திருந்தபோதும் படையினர் யாருடைய அனுமதியோடு இந்த விகாரையை அமைத்தனர்? அதற்கான பணம் எங்கிருந்து வந்தது? இதற்குப்பின்னணியில் இருந்தவர்கள் யார்? என்ற கேள்விகளோடு இந்த விகாரை அமைக்கப்பட்டதன் பின்னால் ஏதோ மர்மம் உள்ளதாகவே தோன்றுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் தனியார் காணியில் விகாரை அமைத்தமையாகும்.

கொழும்பு துறைமுகப் பகுதியில் அதுவும் அதி பாதுகாப்பு பிரதேசத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அண்மையில் செம்மணியில் மின்சார தகன மேடை அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டபோது மனித எச்சங்கள் வெளிவந்ததாக கூறப்படுகிறது. இவற்றைத் தவிர நாட்டின் தமிழர் பிரதேசம் உட்பட பல பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அது தொடர்பான விசாரணை முழுமை பெற்றதாக இல்லை. காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடுவோர் மனிதப் புதைகுழிகளுக்கு முன்னால் நின்று கண்ணீர் விடுகின்றனர்.

நீதி கேட்டு வீதியில் நிற்கின்றனர். அவர்களுக்கு இன்றுவரை நீதி கிட்டவில்லை. இந்த நிலையில் அவ்வாறான ஒரு மனிதப் புதைகுழியினை மறைக்கும் முகமாக இவ்விகாரை கட்டப்பட்டுள்ளதா? என மக்கள் சந்தேகம் கொள்வதிலும் நியாயம் இருக்கிறது.

தையிட்டி விகாரை என்பது நில ஆக்கிரமிப்பு, போர்வெற்றி, பௌத்தமயமாக்கல் அடையாளங்களுக்கு அப்பாலும் சிந்திக்க வைக்கிறது. ஏனெனில், உண்மையில் பௌத்தத்தைக் காக்கவேண்டும் எனில் வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடத்திலேயே விகாரை கட்டப்பட்டிருக்கவேண்டும். அதனை தவிர்த்துவிட்டு வேறோர் இடத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்? அதுவும் அவசர அவசரமாக விகாரை கட்டப்பட்டுள்ளது. அதுவே விகாரைக்குப் பின்னால் ஏதோ மர்மம் உள்ளது. அதனை மறைக்கவே படையினர் திட்டமிட்டு செயற்பட்டுள்ளனர் என மக்கள் சிந்திக்கின்றனர். மர்ம முடிச்சை அவிழ்க்கவேண்டியதும் மக்களின் சந்தேகத்தை தீர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

போர்க் காலத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. உயிருக்குப் பயந்து அபயம் தேடி அங்கு வந்திருந்த மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். மக்கள் வாய்திறக்கவில்லை. ஏனெனில் அடக்குமுறை, கொலை, ஆயுதம் அவர்களுக்கு நேராக நீட்டிக்கொண்டிருந்ததோடு தலைக்கு நேராகவும் தொங்கிக்கொண்டிருந்தது. தம்புள்ளையில் இந்து ஆலயமொன்று அனுமதியின்றி கட்டப்பட்டதாக இடித்து அழிக்கப்பட்டபோது மக்கள் பொறுமை காத்தனர். ஆனால், திஸ்ஸ விகாரை என்பது சிங்கள பௌத்த பேரினவாதம் தம் தலையில் காலை வைத்து விதைத்திருப்பதன் அடையாளமாகவே மக்கள் உணர்கின்றனர். அதனால் மக்கள் தம் அறக்கோபத்தையே வெளிப்படுத்துகின்றார். இதனை ஆட்சியாளர்கள் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

வெறுமனே பிழையான இடத்தில் விகாரை கட்டப்பட்டுள்ளது என்று கூறுவது மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு அல்ல. மக்களுடைய சந்தேகங்கள் தீர்க்கப்படவேண்டும். நீதி நிலைநாட்டப்படவேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும். நாட்டின் சட்டங்களுக்கு காவலாக இருப்போம் என்பதை ஆட்சியாளர் உறுதிபடுத்தவும் வேண்டும்.

கடந்த கால ஆட்சியாளருக்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்ன செய்யமுடியும்? என கேள்வி கேட்போர் ஒன்றை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியினர் கடந்த கால தவறுகளை எல்லாம் சுட்டிக்காட்டி அதற்கு காரணமானவர்கள் நீதியின் முன்நிறுத்தப்படுவார்கள். தண்டிக்கப்படுவார்கள் என்று கூறியதை மறந்துவிடமுடியாது. தற்போது அவர்களைத் தேடி தேடி வலை வீசி நீதிமன்றம் கொண்டுவர முயற்சிப்பதை நாம் காண்கின்றோம். பலர் மீது வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளது. எனவே, திஸ்ஸ விகாரை விடயத்திலும் அநீதி நிகழ்ந்துள்ளது. இங்கும் நீதி நிலைநாட்டப்படுவதோடு குற்றவாளிகள் நீதிமன்றுக்கு கொண்டுசெல்லப்படவேண்டும்.

இங்கு விகாரைப் பிரச்சினை என்பது சமயம் சார்ந்த, பக்தி சார்ந்த பிரச்சினை அல்ல. இது தமிழ் மக்களின் அரசியலோடு தொடர்புடையது. அதனாலேயே போலி சிங்களத் தேசியவாதிகளும் சிங்கள பௌத்த அரசியல்வாதிகளும் கூக்குரல் இடுகின்றனர். தமிழர்களின் அரசியல் வீழ்த்தப்பட்டதன் அடையாளமாகவே விகாரை அமைந்துள்ளது. இதனை ஏற்க முடியாது. எனவே மனிதப் புதைகுழி விகாரைக்குள் இருக்கலாமோ என்கின்ற சாதாரண சந்தேகத்தினை தீர்க்க வேண்டியது ஆட்சியாளரின் கடமை. அதேபோன்று நீதியை நிலைநாட்ட வேண்டியதும் அவர்களின் பொறுப்பாகும்.

இதற்கான அழுத்தத்தினை தமிழ்தேசத்தின்

## மனிதப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சியினர் உட்பட அனைவரும் ஒன்றிணைந்து கொடுக்கவேண்டும். மக்களோடு பயணிக்க வேண்டும். இதுவே இன்றைய தேவை. அதுவே மக்களுக்கான அரசியல் கௌரவமாகவும் நீதிக்கான பயணமாகவும் அமையும் என்றார்.

## 4 வருடங்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான நான்கு வருட காலப் பகுதியில் காட்டு யானைகள் தாக்கியதில் 1,578 மனிதர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 739 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இந்த நான்கு வருடங்களுக்குள் 2018 யானைகளும் உயிரிழந்துள்ளன.

நாட்டில் தொடரும் யானை - மனித மோதல்களுக்கு நிரந்தர மற்றும் விஞ்ஞானபூர்வமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும்.

மின்சார வேலிகளை அமைத்தல், யானைகள் உள்வரும் பகுதிகளில் காவலரண்களை உருவாக்கி யானைகளை துரத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், யானைகள் செல்லும் வழிகளை இனம்கண்டு முறையாக அதனை அமைத்து அவற்றுக்கு வாய்ப்பளித்தல், யானை -மனிதன் மோதல்களைத் தடுப்பதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை பின்பற்றுவதன் மூலம் யானைகளால் எதிர்கொள்ள நேரும் பாதிப்புகளையும் அழிவுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 6 மணி நேரம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

'தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்' என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் பெயரில் போலி முகநூல்களில் பதிவுகள் பகிரப்பட்டன. குறித்த பதிவுகள் பகிரப்பட்டு சில மணிநேரங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குறித்த பதிவு போலியானது என தனது சமூக ஊடகங்களில் பதிவிட்டதுடன், ஊடக சந்திப்பொன்றினையும் நடத்தி அது போலியான விளம்பரங்கள் என அறிவித்திருந்தார்.

அந்நிலையில் கடந்த வாரம், 'விகாரையை இடிக்க வாரீர்' என போலி முகநூல்களில் விளம்பரப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் கஜேந்திரகுமாருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பலாலி பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் அச்சுவேலி பகுதியை சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பில் நேற்று விசாரணை நடத்தி வாக்கு மூலம் பெற்றுள்ளனர் பொலிஸார். பலாலி பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பிரிவுக்கு அவர்களை அழைத்த பொலிஸார், அங்கிருந்து உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள பலாலி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சுயாதீனச் செய்தியாளர்களான பிரதீபன் மற்றும் பரதன் ஆகியோரிடமே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இரண்டு ஊடகவியலாளர்களின் தொலைபேசிகளும் கூடச் சோதனையிடப் பட்டுள்ளன. அவர்களிடம் சுமார் 6 மணி நேரம் தீவிர விசாரணை நடத்தப்பட்டுள்ளது. வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்ட பின்னர், குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் தாம் அழைக்கும் போது பொலிஸ் நிலையத்திற்கு சமூகம் அளிக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் இருவரையும் பொலிஸார் விடுவித்துள்ளனர்.

அதேவேளை தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்த, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வாசுகி சுதாகரன், வேலன் சுவாமிகள் உள்ளிட்டோரை பலாலி பொலிஸார் வாக்கு மூலம் வழங்க என வியாழக்கிழமை பலாலி பொலிஸ் நிலையத்தின் உப பிரிவுக்கு அழைத்து சுமார் 2 மணி நேரம் காத்திருக்க வைத்த பின்னர் வாக்கு மூலங்களை பெற்றிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து இப்போது ஊடகவியலாளர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளைப் பேணி வந்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணி வேடத்தில் சென்று 'கணேமுல்ல சஞ்சீவ' மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திய பிரதான சந்தேகநபரும், சந்தேகநபர் தப்பிச்செல்வதற்கு உதவி செய்த வான் சாரதியும் நீதிமன்ற உத்தரவின் கீழ் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




ST JOHN'S COLLEGE JAFFNA • CEYLON
OBA SOUTH SRI LANKA & SJC OBA
Presents
VISH
Sponsored
JOHNIANS BASH 2025
JOIN THE FIRST-EVER JOINT OBA EVENT !
SECURE YOUR SPOT NOW! OPEN TO ALL JOHNIANS
FEW SLOTS REMAIN
22 FEB
MATCHES 9AM-2PM - FRAZER GROUND, DEHIWALA
FELLOWSHIP NIGHT 7PM - 12AM - PARTY PARTY
BEACH RESTAURANT
FELLOWSHIP NIGHT | TICKET 3000/-
EXCITING CRICKET & FOOTBALL MATCHES
UNFORGETTABLE EVENING GATHERING
FUN-FILLED ACTIVITIES FOR JOHNIANS
CONTACT :- COL - +94777738017 +94777812488 +94773701024
+94771485823 +94777774096 JAF - +94773540155 +94773013654
+94772920304 +94777888215
GOLD SPONSOR
voyzant
TRUSTED FOR TRAVEL
A JOINT EVENT OF OBA SOUTH SRI LANKA & SJC OBA

# வாழ்க்கை மாற்றத்துக்கான உளவளதுணை கற்பிட்டி பிரதேச செயலகத்தில் பயிற்சிகள்

(சியாஜ்)

கற்பிட்டியில் முதன் முறையாக வாழ்க்கை மாற்றத்திற்கான ஒரு நாள் உளவள ஆலோசனை இலவச பயிற்சிப் பட்டறை ஒன்று கற்பிட்டி செடோ நெனசலவின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர், நிர்வாக இயக்குநர் ஏ.ஆர் முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.

உளவியல் என்பதன் முக்கியத்துவம், வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் தனிநபர் மற்றும் குடும்ப ஆலோசனைகள், குழந்தைகள் மற்றும் சமூக உளவியல் சேவைகள் என்பன பற்றிய தெளிவூட்டல்களை கற்பிட்டி பிரதேச செயலக சமூக வலுவூட்டல் அமைச்சின் புத்தளம் மாவட்ட உளவளதுணை இணைப்பாளர் எச்.எம் நிப்ராஸ் வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் செடோ ஸ்ரீலங்காவின் நிர்வாக பொறுப்பாளரும் செடோ நெனசல நிர்வாக இயக்குநருமான ஏ.ஆர். எம் ஹாபிஸ், செடோ ஸ்ரீலங்கா பொருளாளர் மபாஹிஸா பேஹம், செடோ ஸ்ரீலங்கா கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அதிகாரி எஸ்.எப் சுஜானா, செடோ நெசனல் உளவளதுணை இணைப்பாளர் எம்.ஆர்.எப் சிப்கா, செடோ ஸ்ரீலங்கா ஊடக இணைப்பாளர் எம்.எஸ்.எம் சஜான் மற்றும் செடோ ஸ்ரீணலங்காவின் காரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர் சப்னா பானு ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இப் பயிற்சி பட்டறையில் சுமார் 50 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# கல்முனை இஸ்லாமாபாத் ம.வி.யில் 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டம்

(அஷ்ரப்கான்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சமூகரீதியான, சுற்றாடல்ரீதியான மற்றும் ஒழுக்க விழுமிய ரீதியிலான 'கிளீன் சிறிலங்கா' எனும் வேலைத் திட்டத்திற்கமைவாக 2025.02.18 ஆம் திகதி அதிபர் ஏ ஜி முகமது றிசாதின் தலைமையில் இத்திட்டம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது செயல்களை முன்னெடுப்போம், பொறுப்புடன் செயற்படுவோம்,. சூழல்நேய பாடசாலையிலிருந்து எதிர்கால பசுமைத் தலைவர்களை உருவாக்குவோம். பல்வகைமையை மதிக்கின்ற மகிழ்ச்சிக்குரிய வகுப்பறை, செயல்களில் நியாயத்தன்மை மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திலும் வெளிப்படைத்தன்மை மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் எனும் தொனிப்பொருள்களுக்கேற்ப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் இணைந்து சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.







# பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள்

(கேதீஸ்)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005 - 2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களின் பங்களிப்பில் கல்முனை திருக்கோவில்தாண்டியடி விக்னேஸ்வராமகா வித்தியாலபாடசாலையின் மாணவர்களுக்கு பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மேலும் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளுக்கு அவசியமான ஒலி அமைப்பு சாதன வசதியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005 - 2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களான கிருபானந்த், தனுஷாந்த், கேதீஸ், நிதர்ஷன், வினோத் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள். மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கைத்தொழில் அமைச்சர் யாழ்ப்பாணம் வருகை

## தொழில் மேம்பாட்டிற்கான புதிய முயற்சி

கைத்தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்கா மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் டாக்டர் ஹர்சன சூரியப்பெரும ஆகியோர் நேற்று நாடாளுமன்றத்தில் மீன்பிடியியல் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி மற்றும் வைத்தியர் பவானந்தராஜா ஆகியோருடன் விசேட சந்திப்பு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் வழிமுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

காங்கேசன்துறை, ஆனையிறவு, பரந்தன், மாங்குளம் மற்றும் ஒட்டுசுட்டான் உள்ளிட்ட பகுதிகளில் கைத்தொழில்துறை அபிவிருத்திக்கு தேவையான நடைமுறைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி மேற்குறித்த அமைச்சர்கள் குழுவினர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

இதன்போது, கைத்தொழில்துறை அபிவிருத்திக்காக சிறப்புப் பார்வையிடுவதோடு, தொழிற்சாலைகள் மற்றும் தொழில்பேட்டைகள் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த முயற்சியின் மூலம் வடக்கு மாகாணத்தில் தொழில் வாய்ப்புகளை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய தொழிற்பேட்டைகளை உருவாகி, வலுவான பொருளாதார அடித்தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு உருவாகும்.






# ஹற்றனில் விபத்து மூன்று பேர் காயம்

(கிஷாந்தன்)

ஹற்றனில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், வீதியில் பயணித்த ஒருவரை மோதி ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இருவரும் குறித்த நபரும் காயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதியில் குடாகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தேயிலைத் தோட்டத்தில் வேலை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குறித்த நபர், கவனக்குறைவாக பிரதான வீதியில் கடக்க முயன்றபோது, ஓடும் மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியதில், குறித்த நபர் சிறிது தூரம் தூக்கி வீசப்பட்டதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து குறித்து ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களைத் தலைக்கவசம் அணியாது ஏற்றிசெல்வோருக்கு எதிராக நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் கண்டிப்பான உத்தரவு

பாடசாலை மாணவர்கள் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி செல்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவிடம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம் பணித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது, ஆளுநர், பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் பெற்றோர் உள்ளிட்ட எவரும் மாணவர்களுக்கு தலைக்கவசம் அணிவிக்காது ஏற்றிச் செல்வதாக முறையிடுகின்றனர்.

குறிப்பாக மருத்துவர்களால் இந்த விடயம் அதிகளவில் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. தலைக்கவசம் அணியாது பயணிப்பதால் விபத்துக்களில் மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, சட்டம் ஒழுங்கைப்பேணும் வகையில் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும். மாணவர்களை அவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் ஏற்றிச் செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் கோரினார்.

அதற்கு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இது தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும், அதனை இறுக்கமாகப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, யாழ் ராணி ரயில் மீது இனந்தெரியாதவர்கள் கல் வீச்சு தாக்குதல் நடத்துவதாக சுட்டிக்காட்டப்படுவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் குறித்த சில பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறவில்லை என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதிலளித்ததுடன், ஆளுநர் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டார்.

# நூல் அறிமுக நிகழ்வும் கலைஞர்கள் ஒன்றுகூடலும்

(நௌபர்)

மூதூர் கலாசார அதிகார சபை கலைஞர்கள் ஒன்று கூடலும் நூல் அறிமுக நிகழ்வும் - 2025 மூதூர் கலாசார அதிகார சபையின் புதிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான கலைஞர்கள் ஒன்று கூடல் பொதுக்கூட்டம் உதவி பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் 2025.02.15 மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிகார சபைக்கான புதிய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பனஇணைந்துபதிப்பித்தஇலங்கைமுஸ்லிம்களின் பாரம்பரிய கலைகள் கஸிதா, களிகம்பு, பக்கீர் பைத் பாரம்பரியம்மா ஆகிய நூல்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நூல் அறிமுகத்தை மூதுரை சேர்ந்த ஏ எஸ் எம் திலீப் பௌஸ்ஸா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதுடன் உதவிப் பிரதேச செயலாளர்



மற்றும் மூதூர் பிரதேச கலாசார அதிகார சபையின் முன்னாள் மற்றும் பின்னாள் செயலாளர்களுக்கும் நூல் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# காரைதீவு, நிந்தவூர், ஒலுவில் பிரதேச உணவகங்களில் திடீர் சோதனைகள்

## நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

(நூருல் ஹுதா உமர்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுனங்களை சோதனைக்குட்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் காரைதீவு, நிந்தவூர் மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் தலைமையிலான, அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.முனவ்வர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்ஸதீன், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவுமருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.



இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தாயாரிக்கும் பாத்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தும் வேலைத்திட்டம் பிராந்திய பணிப்பாளர்உத்தரவிற்கமைவாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.02.2025இல் வெளியிடப்பெற்றது